விலை சதம் 25

# ஈழநாடு

மலர்: 15 The Eelanaadu இதழ் 350
யாழ்ப்பாணம் தை 25 முஹர்ரம் 13 வியாழக்கிழமை 7—2—74

'ஈழநாடு' சந்தா
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி - வாரமலர் [உட்பட] | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 34-00 | ரூ. 6-00 |
| 6 மாதம் | ரூ 67-00 | ரூ 12-00 |
| 1 வருடம் | ரூ 132-00 | ரூ 24-00 |

[ஆள் மூலம் விநியோகம்]
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)

| | தினசரி - வாரமலர் (உட்பட) | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 26-00 | ரூ 5-0 |
| 6 மாதம் | ரூ. 51-00 | ரூ 10-00 |
| 1 வருடம் | ரூ. 100-00 | ரூ. 18-00 |

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY -7 FEB 1974

# "பண்டா - செல்வா ஒப்பந்தம் அமுலாகியிருந்தால் நல்லதே!

## தமிழரசாருடன் பேச்சு நடத்தவும் உத்தேசம்"

### சங்கானையில் அனுரா பேச்சு

சங்கானை, புதன்

பண்டா-செல்வா ஒப்பந்தம் அமுல் செய்யப் பட்டிருந்தால் இன்று நிலை [illegible] இருக்குமென்றும் இந்திய [illegible] கழகத்துக்கும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் எதுவித உறவுமில்லையென்று இந்தியப்பிரதமர் உறுதியளித்திருப்பதாகவும் தமிழரசுக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்திருப்பதாகவும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் புதல்வனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிபமுன்னணிப் பிரதம அமைப்பாளருமான திரு அனுரா பண்டாரநாயக்கா இன்று சங்கானையில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழர் சிங்களவர் வேறுபாட்டை மறந்து நாட்டை மட்டுமே மனதில் கொண்டு பழையசம்பவங்கள் இனியும் நிகழமாட்டாதென்ற உறுதியுடன் அனைவரும் ஒற்றுமையாக நாட்டுக்காக உழைக்க வேண்டுமென்றும் திரு அனுரா கேட்டுக்கொண்டார்.

திரு. அனுரா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"முன்னைநாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தற்பொழுது சிங்கள மக்களிடையே நிலவும் பேதங்கள் நீங்கி நாடு சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு சுபிட்ச லங்காவாக மலர்ந்திருக்கும்".

இவ்வாறு கூறினார் அனுரா பண்டாரநாயக்கா சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமின்தறி நிலைய மண்டபத்தில் திரு. வை. இராசசுந்தரம் மக்கள் வங்கி இயக்குநராக நியமிக்கப்பட்டதை ஒட்டி அன்னாரைக் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற வைபவத்திலேயே திரு. அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

### அரசு தவறு செய்திருக்கலாம்

திரு. அனுரா மேலும் கூறியதாவது:-கடந்த காலத்தில் எமது அரசாங்கம் சில பிழைகளைத் தவறுதலாகச் செய்திருக்கக்கூடும். ஆனால் நாம் அவைகளைமறந்து ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் போல் சிங்கள தமிழ் மக்கள் ஒன்றுபட்டு உழைக்கமுன்வரல் அவசியம்.

எதிர்காலம் இளைஞர் கையிலேயே தங்கியுள்ளது. எனவே எதிர்கால சந்ததியினர் தற்பொழுது நிலவும் பசி, பட்டினியைப் போக்கி நாட்டில் நிலவும் உணவுப் பிரச்சினையையும், பேதங்களையும் அகற்ற முன்வரவேண்டும். எமது சொந்த நலனுக்கோ அல்லது அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு கேட்டோ வட பகுதிக்கு விஜயம் செய்யவில்லை என்பதையும். தெரிவித்துக்கொள்கிறேன்.



### அரசியல்வாதிகள் தூபமிட்டனர்

பல்லாண்டுகாலமாக நெருங்கிய தொடர்புள்ள தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் இன, மத, மொழி பேதங்கள் நிலவுவது வருந்தத் தக்கதாகும். இவைகள் யாவற்றிற்கும் தூபமிட்டது ஒரு சில அரசியல் வாதிகளே. அப்பேற்பட்டவர்கள் தெற்கிலும் வடக்கிலும் இன்றுமிருந்துகொண்டே உள்ளனர் கடந்த தேர்தலில் இந்தவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மக்களால் அகற்றப்பட்டுள்ளனர் என்பதை யாவரும் அறிவர் எஞ்சியுள்ளவர்களையும் மறு தேர்தலில் மக்கள் புறக்கணிப்பார்கள் என்பது உறுதி. அப்படியான சுயநல அரசியல் வாதிகளின் ஆட்டம் முடிந்துகொண்டேவருகின்றது.

### தமிழரைப் புறக்கணிக்க ஒப்புக்கொள்ள மாட்டேன்

தமிழர்களைப் புறக்கணித்து அவர்களைக் கூறுபோடும் எந்த அரசாங்கத்திற்கும் நான் எனது ஒத்துழைப்பை நல்கவும் மாட்டேன், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் தமிழரசார் அக்கறைகொள்ளவில்லை இவர்கள் யூ. என். பி யுடன் ஒப்பந்தம் ஒன்று வைத்திருப்பதாக தெரியவந்துள்ளது யு. என். பி. யால் தமிழ்மக்கள் பிரச்சினை ஒருபோதும் தீர்க்கப்படமாட்டாது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிதான் தமிழர் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒரே ஒரு கட்சியாகும் சென்ற காலத்தில் நிகழ்ந்த அசம்பா

(5ம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் ஆலயப் பிரவேசம்

[உடுப்பிட்டி, புதன்]

உடுப்பிட்டித் தொகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற தலமும், சிதம்பரத்தைப்போல் பூஜை முறைகள் நடப்பதுமான கரவெட்டி வெல்லனித் பிள்ளையார் கோவில், தைப்பூசத்தினமான நேற்றுத் தொடக்கம், சிறுபான்மைத் தமிழரும் ஆலயத்தின் உட்சென்று வழிபடத் திறந்துவிடப்பட்டுள்ளது.

கரவெட்டி மேற்கு மத்தொலி வள்ளுவர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த சுமார் 25 பேர் அமைதியான முறையில் ஆலயப்பிரவேசம் செய்யும்பொழுது, ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் வித்துவான் திரு. நடராசா ஆலயத்துள் அவர்களை அழைத்துச் சென்றார்.

தமிழர் கூட்டணி உபதலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் வித்துவான் திரு. நடராசாவும், ஆலய தர்மகர்த்தா சபையினரும் எடுத்துக்கொண்ட ஆலோசனையின்போது, சகலரும் சமமாக நின்று வழிபடுவதற்காக ஆலயத்தைத் திறந்துவிடுவதென முடிவு செய்யப்பட்டது.

வள்ளுவர் சனசமூக நிலைய தலைவர் திரு. க. நாகமுத்து, செயலாளர் திரு. ஆ. வன்னியசிங்கம், மற்றும் நிர்வாகிகள் திருவாளர்கள்: கே. கோபால், வா. மாணிக்கம், க. மாணிக்கம், ஐ. இராமச்சந்திரன், க. தியாகராஜா உட்பட சுமார் 25 பேர் ஆலயப்பிரவேசத்தில் கலந்து கொண்டனர். (அ)

குவைத்தில் பயங்கரவாதிகள்

## ஜாப். தூதரகத்தை ஆக்கிரமித்துள்ளனர்

குவைத், பெப். 6

குவைத்திலுள்ள ஜப்பானிய தூதரகத்தை ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது.

சிங்கப்பூரில் எண்ணெய்க் கம்பனியொன்றின் படகொன்றைக் கைப்பற்றி வைத்துக் கொண்டிருக்கும் 4 தீவிரவாதிகளும் பத்திரமாக வெளியேறிச் செல்வதற்கான ஏற்பாடுகளைப் பகிரங்கமாகச் செய்யும்படி ஜப்பானிய அரசை வற்புறுத்தவே குவைத்திலுள்ள ஜப்பானிய தூதரகத்தை ஆயுதந் தாங்கிய இக்கோஷ்டியினர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதேசமயம் சிங்கப்பூரில் உள்ள பயங்கரவாதிகள் விடுத்துள்ள கோரிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படுமென்று ஜப்பானிய அரசு அறிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

## 60 ஓவர் போட்டி இந்தியா வெற்றி

கொழும்பு, புதன்

இலங்கை இந்திய கோஷ்டிகளுக்கிடையில் இன்று சி. சி. சி. மைதானத்தில் நடைபெற்ற 60 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியக்கோஷ்டி 5 விக்கட்டுகளால் வெற்றியடைந்தது.

இலங்கைக் கோஷ்டி 54 ஓவர்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்

(5-ம் பக்கம் பார்க்க)

## பலாலி விமான நிலையத்தில் ஏமாற்றம்! அனுரா காரில் வந்தார்

(யாழ்ப்பாணம், வியாழன்)

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாலிபர் முன்னணி அமைப்பாளருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா நேற்றும் காலை யாழ்ப்பாணத்துக்கு எதிர்பாராதவிதமாக காரிலேயே வந்துசேர்ந்தார்.

பலாலி விமான நிலையத்தில் அவரை வரவேற்கக் காத்திருந்த உள்ளூர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் ஏமாற்றத்துக்குள்ளானார்கள்.

விமானத்தில் வருகிறதாக எதிர்பார்த்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும், திரு. அனுரா யாழ். நகருக்கு வந்து யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவைச் சந்தித்த பின்னர் சங்[illegible] சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### கல்வி

ஜி. ஸி. ஈ. 1974 ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma, Jungle Tide, Macbeth, English Prose) ஆங்கிலம் பேச்சு (Spoken English) வகுப்புகளில் வந்து கற்றுக் கொள்ளுங்கள். இங்கிலீஷ் ஹோம் யூனிற். விவரங்களுக்கு: 164 ஈழநாடு கேந்திரம், யாழ்ப்பாணம். 164

### கல்வி

ஜி. ஸி. ஈ. உயர்தர (G.C.E. A.L) வகுப்புக்கள் ஆங்கில இலக்கியத்திலும் மற்றும் கலைப் பாடங்களிலும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன. பிராஜ்மன் என்றப்பிரைசஸ், தையல் முத்து மாளிகை, 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

### இலவசம்

ஜி.ஸி.ஈ. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தக, கலை, விஞ்ஞான பாடங்களைப் போதிக்கும் "தொடர்பு லெஸ்ஸ்" இலவசமாக வழங்குகிறார்கள். முத்திரையிட்ட அஞ்சல் உறையை 70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவும். 194

### விற்பனைக்கு

வசதியான வீடு, குழிமலகூடம் முதலியவற்றுடன் ஒன்றேகால் பரப்புக் காணி ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் வைரவர் கோவில் ஒழுங்கையில் விற்பனைக்கு உண்டு. மேற்கூறிய விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்க-செ. தம்பிஐயா. 949

### விற்பனைக்கு

மிகவும் நேர்த்தியாய் பெருங்கமங்களுக்கு நீர்பாய்ச்ச டீசல், (DIESEL) நீயுமன், சென்றிக் மின்சார மோட்டார் பம்புகளும் கொடுப்போம். இவையாவும் வடமாகாணப் பகுதிகளில் மண்ணெண்ணை பம்புகளிலும்பார்க்க நேர்த்தியாய் வேலை செய்வதால் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள். விபரங்களுக்கு:-திருச்செல்வம் அன் கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 947

E L மொறிஸ் மைனர் ஒவர் கெட் என்ஜின் 153/D சென் பீற்றேஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (கல்விகந்தோர் அருகே) ஞாயிற்றுக்கிழமை 10-ந் திகதி பார்வையிடலாம். 946

சொந்தப்பாவிப்பில் உள்ள F. L. 631 இல்மன் கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு டாக்டர் அ. பொன்னம்பலம், ஆனைக்கோட்டை. 948

யாழ்ப்பாணம், சென்ற் மத்தேயுஸ் றோட், 16-ம் இலக்கத்தில் உள்ள 14லாச்சம் நிலப்பரப்பு ஆகக்கூடிய விலைக்கு யுனிமணிசிங்கி, 227, ஹல்லை டோப் வீதி, கொழும்பு. 945

### வைத்தியம்

ஹோமியோபதி நான்கு வருட தினசரிவகுப்புகள் நடைபெறுகிறது. விபரங்களுக்கு நேரில் வரவும். அதிபர், வட இலங்கை ஹோமியோபதி கல்லூரி, 74, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

---

புத்தூரில்

## பாண் விநியோகம் பொதுத் தாபனங்களிடம்

(வண்ணார்பண்ணை, செய்வாய்)

புத்தூர்ப்பகுதியில் பண்விநியோகத்தை சனசமூக நிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகிய பொதுஸ்தாபனங்கள் மேற்கொண்டுள்ளன. இப்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதிக்கான பாண் விநியோகத்தை செய்வதற்கு முடியாத நிலை இருந்ததால் கோப்பாய் காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை பொது ஸ்தாபனங்கள் மூலம் பாண்விநியோகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கிராமசபைப் பகுதியில் உள்ள 7 பொது ஸ்தாபனங்கள் இந்த விநியோகப் பொறுப்பை ஏற்று நடத்திவருகின்றன. [அ]

## பொருட்களின் விலை அதிகரிக்காதாம்

(கொழும்பு, செவ்.)

"உலக சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்திருந்தபோதிலும் இலங்கையில் உடனடியாகப் பொருட்களின் விலை அதிகரிக்காது" என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன தெரிவித்தார்.

இப்போது நமக்குத் தேவையான சகல அத்தியாவசியப் பொருட்களும் போதியளவு கையிலிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உலகச் சந்தையில் சீனி, மாவு ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதையடுத்து இலங்கையிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம் என கருதப்பட்டுவருகிறது. ஆனால் இது தவறு என...

## பல்கலைக்கழக நெருக்கடி: அமைச்சர் கூட்டும் மகாநாடு

கொழும்பு, புதன்

பல்கலைக்கழக அனுமதிக்குரிய தகைமை பெற்றிருந்தும் அங்கு அனுமதி பெற முடியாத 2,400 மாணவர்களின் நிலை பற்றி ஆராய்வதற்காக கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இவ்வாரம் பல்கலைக்கழக அதிகாரிகளைச் சந்திக்க இருக்கிறார்.

தகைமை பெற்றிருந்தும் நாட்டில் உள்ள ஐந்து பல்கலைக்கழக வளாகங்களிலும் இடமின்மைகாரணமாக 2400 விஞ்ஞான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப்பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இவர்களின் எதிர் காலம் பற்றி ஆராய்வதற்காகவே கல்வி அமைச்சர் பல்கலைக்கழக உபவேந்தர்வளாகத் தலைவர்கள் பீடத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கிறார்.

## "எண்ணெய் வளத்திற்கு நல்ல சகுனம்!" — பிரதமர்

(சண்டி, புதன்)

"ஈழம் தானெண்ணெய்வளம் பெறப்போகிறது என்பதற்கு இன்றைய வைபவம் நல்ல சகுனம்" என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

சரித்திரப் பிரசித்திபெற்ற ஹொமலுவை தலதாமாளிகைக்குக் கையளிக்கப்பட்ட வைபவத்தில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறுசொன்னார்.

இன்று காலை 10.20 மணிக்கும், 10.30 மணிக்குமிடையில் இந்தக் கையளிக்கும் வைபவம் நடந்தது.

ஏப்ரல் மாதத்துக்குள் பேசாலையில் எண்ணெய் வளம் இருக்கிறதா என்பது தெரிந்துவிடும் என்றும், எண்ணெய் மூலம் நாடு சுபீட்சமடைந்துவிடும் என்பதற்கு இன்றுஇந்த வைபவம் நல்ல சகுனம் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

"அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக்காட்டுவதற்கு 'சத்தியாக்கிரகமும்', 'சத்தியகிரிகை'களும் தான் கிடைத்ததா?" என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ கேட்டார்.

"எதிர்ப்புக்காட்டுவது தவறென்று கூறவில்லை. ஆனால் அதற்காக தவறான வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பது மக்களை வீண் கஷ்டத்துக்குள்ளாக்குவதாகும்" என்றார்.

"இப்போதைய பிரச்னைகள் இந்நாட்டுக்கு மட்டும் சொந்தமானதல்ல, உலக நாடுகளுக்கே சொந்தமானது. தற்காலிகமான பிரச்னைகள் மக்களின் உழைப்பின்மூலம் விரைவிலேயே நிவர்த்தி செய்யப்படும்" என்றும் பிரதமர் கூறினார்.

இன்று பிரதமர் ஆரம்பித்துவைக்கும்

## பேசாலை எண்ணெய்க்கிணறு தோண்டும் வேலை!

(மன்னார், வியாழன்)

மன்னார் பேசாலையில் எண்ணெய்க் கிணறு தோண்டும் வேலை இன்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இன்று காலை சுபவேளையான காலை 9-35 மணிக்கு சகல சமயங்களின் விசேஷ பூசை நிகழ்ச்சியுடன் இந்த வேலை ஆரம்பமாகும்.

சோவியத் நிபுணர்களின் ... எண்ணெய்க் கிணறு தோண்டும் வேலைகளை இலங்கை நிபுணர்கள் செய்கிறார்கள். சோவியத் குழுவும், இலங்கை பொறியியலாளர் குழுவும் ஏற்கனவே பேசாலை வந்துள்ளது.

கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சித்துறை அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா, உதவி அமைச்சர் திரு. எஸ். கே. சூரியாராய்ச்சி, பெற்றோலியம் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்த வைபவத்தில் இன்று கலந்துகொள்கின்றனர்.

மன்னாருக்கு இன்று விஜயம் செய்யும் பிரதமர் மன்னார்க் கச்சேரிப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள இட்டமிடல் அலுவலகத்தையும் திறந்துவைப்பார்.

## கொள்ளைக் கோஷ்டி பிடிபட்டது

ஜா-எல, புதன்

கொள்ளைக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களை ஏற்றிச்சென்றதாகச் சந்தேகிக்கப்பட்ட கார் ஒன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து காரிலிருந்தவர்களைக் கைது செய்தனர்.

பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமுற்றதாகவும் இன்னு மொருவரை பொலிசார்கைது செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். குறிப்பிட்ட கார்ச்சாரதி தப்பி ஓடிவிட்டாராம்.

வீதியில் சென்ற குறிப்பிட்ட காரை பொலிசார் தடுத்ததாகவும் அப்போது கார் நிற்காமல் தொடர்ந்து சென்றமையினாலேயே பொலிசார்சந்தேகத்தின் பேரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்காரிலிருந்து 11 ஜாடிகளிலிருந்து 650 போத்தல் சட்டவிரோதவாகத் தயாரிக்கப்பட்ட மதுபானம் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜா-எல பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 13000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து 15-2-74 வெள்ளிக்கிழமை 12 மணிக்கு முன்னதாகச் சங்கக்காரியாலயத்தில் சேர்க்கப்படவேண்டும். விண்ணப்பத்திற்குரிய வைப்புப்பணம் ரூபா 250/- ஆகும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம். 176

## உழைக்கும் கரங்களுக்கு மதிப்பு

(ஊர்காவற்றுறை, புதன்)

உணவு உற்பத்தியை பெருக்குங்கள் என்ற கோரிக்கை இன்று நாடெங்கும் ஒலிக்கின்றது. பயன்படாது அம்பலமாக கிடந்த நிலங்கள் எல்லாம் இன்று செழுமைதவழும் நிலங்களாக விளங்குகின்றன. உழைக்கும் விவசாயிகளின் கரங்களுக்கு மதிப்பளிக்கும் நிலை உருவாகிவிட்டது. இந்த நிலைமைகளிற்கு காரணமாக விளங்கிய இன்றைய அரசை நாம் பாராட்டாதிருக்கமுடியாது.

மேற்கண்டவாறு தீவுப்பகுதி ஐக்கிய விவசாயிகள் கழக புனரமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் திரு. கே. வி. கே. திருமோகமூர்த்தி குறிப்பிட்டார். திரு. வ. சண்முகராசா தலைமையில் புனரமைப்பு கூட்டம் வேலணையில் நடைபெற்றது.

## கனி மரங்கள் விற்பனை

[வண்ணார்பண்ணை, புதன்]

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதியில் பழ மரங்களை விநியோகித்துவருகின்றது. இப்பகுதியில், மா, பலா, தோடை, கொய்யா, மாதுளை போன்ற பழ மரங்களை உண்டாக்குவதற்கு இப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. கே. இராமலிங்கம் எடுத்துள்ள நடவடிக்கையைத் தொடர்ந்து இச்சங்கம் இந்த விற்பனையை மேற்கொண்டுள்ளது. இந்த மரங்கள், விதைகள், நாற்றுக்கள் ஆகியவற்றை விவசாயப்போதனாசிரியர் இச்சங்கத்திற்குப் பெற்றுக்கொடுத்துள்ளார். [அ]

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம், வியாழன்]

பல ஆண்டுகளாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராயிருந்துவந்த வித்துவான் ம. சபாரத்தினம் இம்மாதத்திலிருந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு இவரது பழைய மாணவரான திரு. எஸ். கே. சிவரத்தினம் மாற்றப்பட்டுள்ளார். [அ]

## ஐவுளியில் மோசடி

கொழும்பு, புதன்

பலகோடி ரூபா பெறுமதியான கூப்பன் ஐவுளிமோசடி சம்பந்தமான விசாரணைகளை உடன் மேற்கொள்ளுமாறு உள்நாட்டு வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினா உத்தரவிட்டுள்ளார்.

கூப்பன் மூலம் பொதுமக்களுக்காக விநியோகம் செய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட 1 கோடியே 61 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 20லட்சம் யார் ஐவுளி வகைகளே மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்படுபவர்கள் அதிகாரிகளாகவோ பொதுமுகாமையாளர்களாகவோ, சதாரண ஊழியர்களாகவோ இருந்தாலும் அவர்களுக்கு ஆகக் கூடிய தண்டனை வழங்கப்படும் என்றும் திரு. இலங்கரத்தின தெரிவித்தார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு பின்வரும் தண்டனைகள் வழங்கப்படும்:-

பதவிநீக்கம் செய்தல் அத்துடன் கூட்டுறவுச் சேவையில் இருந்து தடுத்து வைத்தல்.

மோசடி செய்யப்பட்ட கூப்பன்கள் கணக்கிடப்பட்டு கூப்பன் ஒன்றுக்கு 4-60 வீதம் அபராதம் விதித்தல்.

அபராதம் செலுத்தாத விடத்து சிறைத்தண்டனை விதித்தல்.

## நாளை நிகழும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்:- ஏமாற்றத்திற்கு இடமுண்டு. இன்னல்கள் பின்னிப் பின்னித் தோன்றும். தொழிலில் பகைமை தோன்றும், விவசாயிகள் நிதான புத்தியுடன் நடக்கவேண்டும். வாகனச் செந்தக்காரர்களுக்கு எதிர்பாராத நஷ்டம் உண்டு. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கடமையில் கவனம் வேண்டும். குடும்ப வாழ்க்கை கோணலாக இருக்கும். சுகக் குறைவும் உண்டு. காதலர் வாழ்வில் புகைமை தோன்றும். ...

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மாம்பாள்

இவர் காலஞ்சென்ற நல்லூர் வைரவர் கோவில் குருக்களின் பாரியாரும், நயன்மார்கட்டு மாந்திரீக பூஷணம் சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள், மண்டைதீவு சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள், வேலம்பிராய் சிவஸ்ரீ சச்சிதானந்தக்குருக்கள், கொக்குவில் புதுக் கோயில் சிவஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள், ஸ்ரீமதிகள் சாரதாம்பாள், கமலாம்பாள், ஞானம்பாள், ஸ்ரீராஜாம்பாள் ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நாளை (7-2-74) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, நல்லூர் கோவில் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூகோ. - சிரியா அதிபர்கள் சந்திப்பு

## நேபாளத்திலிருந்து டிட்டோ டமாஸ்கஸ் பயணம்

டமாஸ்கஸ், பெப் 6

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்த யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ நேபாளத்திலிருந்து டமாஸ்கஸ் வந்து சேர்ந்துள்ளார்.

நேபாளத் தலைநகரான காட்மாண்டுவிலிருந்து புறப்பட்ட மார்ஷல்டிட்டோ சிறிதுநேரம் புதுடில்லி விமான நிலையத்தில் தங்கியிருந்தபோது இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவரைச் சந்தித்துப் பேசினர்.

சிரியா வந்துசேர்ந்துள்ள அதிபர் டிட்டோ மேற்காசிய நிலைமை, எண்ணெய் தடை ஆகிய பிரச்னைகள்பற்றி சிரியா அதிபருடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கோலான் பகுதியில் மோதல்

சிரியாவில் கோலான்குன்றுப் பிரதேசத்தில் சிரியாத் துருப்புக்களுக்கும் இஸ்ரேலியத் துருப்புக்களுக்குமிடையில்நேற்றும் சிலமணிநேரம் கடும் சண்டைநடந்தது.

### சிரியாவுக்கு உறுதி

இதே சமயம் இஸ்ரேலியர் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல்வெளியேறும்வரை அமெரிக்காவுக்கு எதிரான எண்ணெய் தடையை தாங்கள் நீக்கப்போவதில்லை என்று சிரியாவுக்கு சவூதி அரேபியாவும் குவைத்தும் உறுதி யளித்திருக்கின்றனவாம்.

# கூப்பன் ஜவுளி விலையும் அதிகரிப்பு: விலை ரூ.5-30

யாழ்ப்பாணம், வியாழன்

கூப்பன் புள்ளிகளுக்கு வழங்கப்படும் ஜவுளிகளின் விலை யார் ஒன்று இரண்டு ரூபா 30 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 3 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த ஜவுளிகள் இனிமேல் 5 ரூபா 30 சதமாக விற்பனை செய்யப்படும்.

புதிய புடைவைக்கூப்பன் புள்ளிகள் அமுலுக்கு வரும்போது இந்த விலை உயர்வும் அமுலுக்கு வரும். புதிய புடைவைக் கூப்பன் புள்ளிகளாக 430-ம் இலக்கமும் வரி செலுத்துவோருக்கு 430 ஏ இலக்கமும் எனப் பாவனைக்கு வந்துள்ளது.

ஒவ்வொரு கூப்பன் புள்ளிக்கும் ஒவ்வொரு யார் வீதமே புடைவை வழங்கப்படுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஈ)

# கீஸிங்கர் மாஸ்கோ செல்கிறார்

வாஷிங்டன், பெப். 6

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹென்றி கீஸிங்கர் அடுத்த மாதம் சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இவ்வருட பிற்பகுதியில் சோவியத் யூனியனுக்குச் செல்லவிருக்கும் அமெரிக்க அதிபர் நிக்ஸனின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவே டாக்டர் கீஸிங்கர் மாஸ்கோ செல்கிறார்.

வாஷிங்டன் விஜயம்செய்த சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. குரோமிக்கோவுக்கும் டாக்டர் கீஸிங்கருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியில் வெளியான கூட்டறிக்கையிலேயே கீஸிங்கரின் மாஸ்கோ விஜயம் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேற்காசிய நிலைமை, அமெரிக்க-சோவியத் உறவு பற்றியும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நடனத்துக்கு கௌரவம்

லண்டன், பெப். 6

உலகப் பிரபல்யம் பெற்ற பலே நடனத் தாரகையான மார்கோபொன்டீன் சீமாட்டிக்கு அமெரிக்கா, 1974-ம் ஆண்டிற்கான பெஞ்ஜாமின் பிராங்லின் பதக்கத்தை அளித்து கௌரவித்துள்ளது. இப்பதக்கத்தைப்பெறும்முதற் பெண்மணி இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பதினெட்டாம் நூற்றுண்டு வாழ்ந்த அமெரிக்க விஞ்ஞானியின் ஞாபகார்த்தமான இப்பதக்கம் ஆங்கிலோ-அமெரிக்க உறவுகளைக் கலை மூலம்வளர்க்கச் சேவை செய்பவர்களுக்கு வருடாந்தம் அளிக்கப்படுகிறது.

# சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி கோரிப்பிரேரணை

## சங்கானை ப. சபையில் நிறைவேறியது

[சங்கானை, புதன்]

சயிக்கிளில் இருவர் பிரயாணம்செய்ய அனுமதி கோரும் பிரேரணையொன்று சங்கானைப் பட்டினசபை மாதாந்தக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

இராசசபைத் தலைவர் திரு. கி. வைரமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தீர்மானத்தின் பிரதிகள் யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபருக்கும் பொலிஸ் மேலிடத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு வானொலி

யாழ்ப்பாணம், வியா.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் பெரிய மீன்பிடிப்படகுகளுக்கு வானொலி சமிக்ஞை கருவிகளைப் பொருத்துவதற்கு மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிதொழிலில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகும் படகுகளை உடனடியாக மீட்பதற்கே இந்நவீன வசதி செய்யப்படவுள்ளது. இதற்கான வானொலி கருவிகள் வெளிநாட்டிலிருந்து விரைவில் இறக்குமதி செய்யப் படவுள்ளதாக அறியப்படுகிறது. தற்போது ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகும் ஒரு படகினை தேடிப்பிடிப்பதற்கு ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட செலவாகின்றதென்றும் வானொலிக் கருவிபொருத்தப் படுவதால் இச்செலவு குறையுமென்றும் மீன்பிடி சம்பந்தப் பட்ட அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார். (இ)

# திருட்டுப் பொருட்கள்மீட்பு

(கொழும்பு, புதன்)

வெலிசறை மார்புநோய் ஆஸ்பத்திரியிலிருந்து திருடப் பட்ட பல மருத்துவ சாதனங்கள் கொழும்பிலுள்ள டிஸ்பென்சறி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

சங்கானைப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்ட இப் பொருட்களில்சத்திரசிகிச்சைக்குரிய சாதனங்கள், மின்சுத்திகரிப்புக் கருவிகள் ஆகியன அடங்கும்.

# வடக்குகடற்றொழிலாளருக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம்,வியாழன்)

''யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவிசெய்ததுபோல் இப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கும் பலவித முன்னேற்றங்களுக்கும் உதவி புரிந்து வருகிறது. விவசாயத்திற்கும், கடற்றொழில் அபிவிருத்திக்கும் அரசு ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது''.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா பச்சிலைப் பள்ளியில் மீன்பிடி கூட்டுறவுச்சங்க மொன்றை திறந்து வைத்துப்பேசும்போது குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி திரு. கே. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழா வைபவத்தில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் தாளையடியில் மீன்பிடிப்பதற்குரிய உபகரணங்கள் விற்கும் நிலையமொன்றும், வெளிச்சவீடொன்றும் அமைக்க முடிவுசெய்துள்ளோம். இப்பகுதி கடற்றொழிலாளர்களின் நன்மை கருதியே இவைகளை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வடபகுதி மக்கள் சுறுசுறுப்பானவர்கள். அவர்கள் எந்தத்துறையிலும் முன்னேற்றப்பாதையில் செல்ல துடிப்பவர்கள். வடபகுதி கடற்றொழிலாளர்கள் தங்களது சுய முயற்சியினால் அரசுக்குப் பல லட்சம் ரூபாய்களை அந்நிய செலாவணியாக சம்பாதித்துக் கொடுத்துள்ளார்கள். அரசின் உற்பத்திப் போருக்கு செவிசாய்த்து அதிகவிளைச்சலைப் பெருக்கிய இப்பகுதி விவசாயிகளைப் போல மீன்பிடித் தொழிலாளர்களும் அயராது உழைக்க முன்வரவேண்டும். இன்றைய அரசு மீன்பிடித் தொழிலாளர்களின் பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முன்நின்று உழைத்து வருகின்றது என்றார்.

## நிக்சனின் பட்ஜட்டை ஏற்க மறுப்பு

[வாஷிங்டன், பெப். 6]

ஜனாதிபதி நிக்சனால் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாண்டுக்கான பட்ஜட்டை அமெரிக்க பார்லிமென்ட் நிராகரிக்கும் நிலை இருப்பதாக செய்தி ஒன்று கூறியது.

1945-ம் ஆண்டைவிட பெருமளவில் அதாவது 8,600 கோடி டாலர் உதவியை தென் வியட்னாமுக்கு வழங்க இந்த பட்ஜட்டில் இடமளிக்கப்பட்டுள்ளது. இதனை பெரும்பாலான அங்கத்தவர்கள் எதிர்ப்பதைக் கூறப்படுகிறது. (ஈ)

# வடக்கின் பயிர்ச்செய்கைக் குழுக்கள் பல பெயரளவில்!

(பருத்தித்துறை, புதன்)

''வடபகுதியில் விரல் விட்டு எண்ணப்படக்கூடிய ஒருசில பயிர்ச்செய்கைக் குழுக்களைத் தவிர்ந்த ஏனைய குழுக்கள் பெயரளவில் மட்டுமே இயங்கி வருகின்றன. உண்மையான விவசாயிகளுக்கு இக்குழுக்களில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லையாகையால் அவர்கள் எவ்வித பயனும் அடைவதில்லை''.

இவ்வாறு வடமராட்சி விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். டி. சம்பந்தமூர்த்தி துன்னாலை இளங்விவசாயிகள் சங்கக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சம்பந்தமூர்த்தி மேலும் கூறியதாவது:

''நெற்காணிச் சட்டத்தின் கீழ் விவசாயிகளின் பாதுகாப்புக்கென உருவாக்கப் பட்ட விவசாயக் குழுக்கள், யதார்த்தத்தில் விவசாயிகள் அல்லாதோரின் நலவுரிமைகளை வளர்க்கும் மன்றங்களாக விளங்குவதால் விவசாயிகளுக்கான பசளை போன்ற பொருட்களை விநியோகிக்கும் அதிகாரம் அப்பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கே அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில்வடபகுதியில் உள்ள பயிர்ச்செய்கைக் குழுக்கள் கலைக்கப் பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்பரிதாப நிலைமாற வேண்டுமாயின் நேர்மையும், கண்ணியமும், கடமையுணர்ச்சியுமுள்ள இளைஞர் பொறுப்பான பதவிகளை வகிக்க முன்வரவேண்டும்.

# ''பொருளாதார அபிவிருத்திக்காக அரசு பதினைந்து வருடங்கள் பதவியிலிருக்க வேண்டும்''

(காலி, புதன்)

''இந்தநாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்விட்டு இன்றைய அரசாங்கம் குறைந்தது பதினைந்து வருடங்களாவது பதவியிலிருக்கவேண்டும்'' என்று வண. அக்குரட்டியே அமரவன்ச நாயக்க தேரோ கூறினர்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் காலிக்கிளை ஆதரவில் இன்றைய பொருளாதார நெருக்கடியையும், உணவு உற்பத்தி இயக்கத்தையும் மக்களுக்கு விளக்குவதற்காக காலியில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே வண. தேரோ மேற்கண்டவாறு கூறினர்.

வண. நெலுவே ஞானந்த நாயக்கதேரோ தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய பிரதிக்கல்வியமைச்சர் திரு பி.வை துடாவை பேசுகையில் நாட்டின் இன்றையபிரச்னை பொருளாதார நெருக்கடி ஒன்றே'' என்று கூறினர்.

திரு. துடாவை மேலும்பேசுகையில் 1972-ம் ஆண்டின் கல்விமுறை மாற்றியமைக்கப் பட்டு விஞ்ஞானக்கல்வி நாட்டின் கிராமப்பகுதிகளிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது. விவசாய உற்பத்திக்குக்கூட விஞ்ஞானக்கல்வி அவசியமாகையாலேயே இக்கல்வி கிராமப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் பட்டது'' என்றும் அவர் கூறினர்.

நாட்டின் அபிவிருத்திக்காக மக்கள் கடுமையாக உழைக்க வேண்டிய அவசியத்தையும் திரு. துடாவை வலியுறுத்தினர்.

பொதுநிர்வாக உள்ளூராட்சி பிரதியமைச்சர் திரு. நீல் டி. அல்விஸ் இக்கருத்தரங்கில் பேசுகையில் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் பெரும்போகத்தில் இரண்டு மடங்கு அதிகமானநெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது'' என்றார்.

அறுவடை செய்யப்பட்ட நெல்லை சந்தைப்படுத்தும்சபைக்கு விற்க முன்வரவேண்டும் என்று திரு. அல்விஸ் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

விவசாயிகள் நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விற்க முன்வராதபட்சத்தில் விவசாயிகளல்லாதவர்களுக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் அரிசி வழங்கமுடியாதநிலை அரசாங்கத்திற்கு ஏற்படுமென்றும் அவர்கூறினர்.

ஸ்ரீஞானந்ததேரோ தமது தலைமையுரையில் 'மேற்கத்திய நாடுகளை இந்தநாடு பின்பற்றாமல் இருந்திருந்தால் இன்றைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கமாட்டாது'' என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கு, கடலட்டை ஏற்றுமதி: ரூபா 6 லட்சம் கிடைத்தது!

## ஊர்காவற்றுறை சங்கத்தின் சாதனை

(யாழ்ப்பாணம், வியாழன்) "நமது நாட்டிற்கு அந்நிய செலாவணியை பெருமளவில் பெற்றுத் தந்த பெருமை ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தையே சாரும். இச்சங்கத்தினர் நமது நாட்டின் பொருளாதார விருத்திக்கும் அரும் பாடுபட்டு உழைத்து வருகின்றார்கள். இவர்களது சேவை மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கவேண்டும்"

மேற்கண்டவாறு நயினாதீவில் சங்குத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசும்போது ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், சட்டத்தரணியுமான வ. கதிரவேலு குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. கதிரவேலு மேலும் பேசுகையில், "கடந்த வருடம் வங்காள தேசத்திற்கும், கல்கத்தாவுக்கும் சங்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இரண்டரை லட்சம் ரூபாவையும், கடலட்டையினை ஏற்றுமதி செய்ததன் மூலம் மூன்றரை லட்சம் ரூபாவினையும் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும். இச்சங்கம் நிறுவப்பட்டதன் மூலம் பல பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றனர். தற்போது இச்சங்கம் வேலையில்லாப் பிரச்சினையைப் போக்குவதற்கு பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்து வருகின்றது. இத்திட்டம் மிக விரைவில் செயல்படத் தொடங்கும். ஒரு காலத்தில் கடற்றொழிலாளர்கள் செல்வாக்கு அற்றவர்களாய் வாழ வசதியின்றி வாடினர். ஓலைக்குடிசையில் வாழ்ந்தனர். இதுபோன்ற சங்கங்களின் மூலம் அவர்களது வாழ்க்கை ஒளிமயமாக்கப்பட்டு விட்டது. இத்தொழிலாளர்கள் இன்று ஏனையவர்களுடன் பொருளாதாரத்துறையில் சமமாக விளங்குகின்றார்கள்.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நயினாதீவு கிராம சபை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். கனகசபை எஸ். மதியாபரணம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (நி)

## "கடவுள் தண்டிப்பார்"

வண்ணார்பண்ணை, புதன்

சுயநலனுக்காக மனிதன் வாழ்வதால் எந்த விதபலனையும் அடையமுடியாது. சுயநலப்புலிகளாக நாம் வாழ்ந்து மக்களை ஏமாற்றிப் பிழைத்தாலும் நிச்சயமாக கடவுளால் நாம் தண்டிக்கப்படுவோம். கடமையை மறந்து சுயநலனில் அக்கறைகொண்டு வாழ்பவர்கள் மனித சமுதாயத்தில் மனிதர்களாக இருக்க முடியாது.

இவ்வாறு உரும்பராய்சைவத் தமிழ் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரிய சங்க வருடாந்தக் கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றிய இக்கல்லூரியின் புதிய அதிபர் திரு. ச. கதிரவேலு கூறினார்.

## "கல்வியே உயர்வு தரும்"

சங்கானை, புதன்

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற ஆன்றோர் கூற்றிற்கமைய இன்றைய இளைஞர் சமுதாயம் கல்வியில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். கல்வி அறிவில்லாதனுக்கு சமுதாயத்தில் இடமேயில்லை உத்தியோகத்திற்குமட்டும் கல்வி பயில்வதுடன் நின்றுவிடாது. தான் கற்ற கல்வியால் நாட்டிற்கே பயன் பெறும் வகையில் ஆக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்."

இவ்வாறு சங்கானை ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபை உறுப்பினரும் ஆசிரியருமான திரு. சி. க. பேரம்பலம் கூறினார்.

சங்கானை இளைஞர் பகுத்தறிவுக்கழகம் திரு. ஏ. ஸ்ரீதயானன் இயந்திரவியல் பொறியியலாளர் மேற்படிப்பிற்காக இம்மாதம் 14-ம் திகதி லண்டன் செல்வதை ஒட்டி பகுத்தறிவுக் கழகத்தால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையிலேயே திரு. பேரம்பலம் மேற்கண்டவாறு கூறினார். திரு. த. ஜெகதீஸ்வரன் தலைமைதாங்கினார்.

## இன்றைய பலன்

தை மீ 25-ந் திகதி (7-2-74)

மேஷம்: பொறியியலாளருக்கும் பொன்னான தினம். புகழும்பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பமுண்டு.

ரிஷபம்: இளமைநினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கனிதாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

மிதுனம்: பூமிப்பிணக்கில் ஒரு சமரசமுடிவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் தவிர்க்கப்படும். பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்.

கடகம்: குடும்பக்கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர் போடும். வாழ்க்கையில் சோர்வுக்கும் இடமுண்டு.

சிம்மம்: நலன்தரும் சம்பவங்கள் நடக்கும். நலிவு சொல்லாமல் பறக்கும். இல்லத்தில் இனிமை பிறக்கும்.

கன்னி: கருத்துவேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும். புதிய இடத்திலிருந்து பகை தலைதூக்கலாம்.

துலாம்: வாகன சுகத்துடன் வாழ்க்கைநலன் வந்துசேரும். தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

விருச்சிகம்: இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பிரிந்தவர் கூடுவர். வேற்றுமைகள் மறையும்.

தனுசு: பகைமூட்டம்தோன்றும். பதட்டமும் உடன்சேரும் மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும்.

மகரம்: இல்லத்தில் இனிமை மலரும். உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுது போக்கும் உண்டு.

கும்பம்: முன்னேற்றத்தில் தடை ஏற்படும். இருபிணிவாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்வீர்கள்.

மீனம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளுமுண்டு. இலட்சியப்பாதையில் முன்னேற்றம் காணப்படும்.

சோதிடக் கணிப்பு
இணுவில் க. சோதிநாதக்குருக்கள்

## ஏழை மாணவருக்கு உதவத் திட்டம்

பருத்தித்துறை, புதன்

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஏழை மாணவருக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை வடமராட்சி தெற்கு மேற்குக் காரியாதிகாரி திரு. சே. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார். (அ)

## கோரிக்கை

வேலணை, புதன்

"அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு பாடசாலைகளை கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக பிரகடனப் படுத்துக"

மேற்கண்டவாறு ஊர்காவற்றுறை எம். பி. திரு. பொ. இரத்தினம் கல்வி அமைச்சிடம் கோரியுள்ளார்.

## லொறி விபத்தில் ஒருவர் பலி

இணுவையாணன், புதன்

தேநீர்க்கடை முதலாளி ஒருவர் தமது தேநீர்க்கடையை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில் வேகமாக வந்து கொண்டிருந்த லொறி ஒன்றினுல் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானூர்.

இச்சம்பவம் உடுப்பிட்டி— வல்வெட்டித்துறையில் கடந்த இரவு இடம்பெற்றது.

உடுப்பிட்டிச் சந்தியில் தேநீர்க்கடை வைத்திருக்கும் கிருஷ்ணபிள்ளை என்பவர் இரவு ஏழு மணிக்கு தமது கடையை மூடிவிட்டு வீடு சென்று கொண்டிருந்தார். உடுப்பிட்டி வல்லிச்சி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் இவர் சென்று கொண்டிருந்த போது வேகமாகவந்த லொறியினுல் மோதப்பட்டு உயிர் துறந்தாராம்.

வல்வெட்டித்துறைப் பொலிசார் உடன் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

### தேர்தல் பிரசாரம்:

## வைத்தியர் குழு மன்னுர் செல்லும்

யாழ்ப்பாணம், வியா.

மன்னுர் இடைத்தேர்தலில் ஆயுள்வேத வைத்தியர் திரு. ஜோன்மார்க் போட்டியிடுவதைப்பாராட்டி யாழ்ப்பாணத்திலுள்ள பல சித்தவைத்தியர்கள் அவருக்குப் பாராட்டுக்கடிதங்களையும் தந்திகளையும் அனுப்பிவைத்துள்ளனர். திரு. ஜோன்மார்க்கிற்காக பிரசாரம் செய்வதற்கு ஆயுள்வேத வைத்தியர்களடங்கிய குழுவொன்று யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் கன்னதிட்டியைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் விஸ்வபாரதி திரு. வி. கே. விஸ்வலிங்கமும் பாராட்டுத்தந்தியொன்றினை ஜோன்மார்க்கிற்கு அனுப்பிவைத்துள்ளார். (தி. அ.)

## வருகின்றனர்

(சுழிபுரம், புதன்)

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலுக்குப் புதிதாக அழகிய சித்திரத்தேர் நிர்மாணிக்க இந்தியாவிலிருந்து சிற்ப நிபுணர்கள் இம்மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர். [அ]

## இளங்கலைஞர்களை ஊக்குவிக்க இசைப்போட்டி

(யாழ்ப்பாணம், வியா) இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம் வருடாவருடம் நடாத்தும் இசைப்போட்டியை இம்முறையும் சிறப்பாக நடாத்தவுள்ளது.

இந்த இசைப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இளங்கலைஞர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

போட்டிகள் வாய்ப்பாட்டின் மூன்று பிரிவாகவும், வாத்தியங்களில் வயலின், மிருதங்கம் என்பவற்றில் தனி இரண்டு பிரிவாகவும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 15-ந் திகதிக்கு முன்னதாக நல்லூர் கோவில் வீதியிலுள்ள மன்றச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

மொத்தம் ஒன்பது பிரிவுகளிலும் முதலிடம் பெறும் இளைஞர்களுக்கு தங்கப்பதக்கமும், இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

சங்கீத பூஷணம் திரு. பொன். சுந்தரலிங்கம் இசைப் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

ஜீ. ஸி. ஈ. உயர்தர

## பரீட்சைத் திகதி மாற்றம்

(கொழும்பு, புதன்)

மார்ச்மாதம் 30-ந் திகதி ஆரம்பமாகவிருந்த ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைத் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய மாற்றத்தின்படி இப் பரீட்சை மார்ச் மாதம் 28-ந் திகதிமுதல் ஏப்ரல் மாதம் 19-ந் திகதிவரை நடைபெறும்.

ஐந்துநாள் வேலைவாரம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதென்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

கலைப்பிரிவு மாணவர்களுக்கு மார்ச் 28-ந் திகதியும் விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் 10-ந் திகதியும் பரீட்சை ஆரம்பமாகும்.

இப்பரீட்சையில் நாற்பதினுயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தீர்மானம்

வண்ணார்பண்ணை, வியா

பிரபல தொழிற்சங்க வாதியும் பட்டதாரியுமான திரு. எஸ். கதிரவேலுவை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை அதிபராக நியமித்ததை இவ்வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் பாராட்டி கல்வி அமைச்சுக்கும் வடமாநிலக் கல்விப் பணியாளருக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. [ச]

### இந்தியா— இலங்கை

## நாளை 2-வது டெஸ்ட்

கொழும்பு, புதன்

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற இருக்கும் இரண்டாவதும் இறுதியுமான கிரிக்கட் டெஸ்ட் போட்டி இம்மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறஇருக்கும் இப்போட்டி கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் இடம் பெறும்.

இப்போட்டியின் நேர்முக வர்ணனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவை 2-ல் ஒலிபரப்படும்.

## உற்சவமும் கதாப்பிரசங்கமும்

(யாழ்ப்பாணம், வியா)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி நெருப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 4ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. திருப்பூங்குடி வீ. வி.கே ஆறுமுகம் உற்சவ நாட்களில் தொடர்ந்து விநாயகபுராண கதாப்பிரசங்கம் நிகழ்த்திவருகிறார்.


இன்று ஆரம்பிக்கும்

# ஸ்ரீதர் சினிமா

சிறப்புற்று ஓங்க எமது

# நல்வாழ்த்துக்கள்!

இந்தத் தியேட்டரை அலங்கரிக்கும் மாபிள் வேலைகள் அனைத்தும் எமது கைவண்ணங்களே.

உங்கள் மாபிள் தேவைகள் எல்லாவற்றிற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

# டயருப்ஸ் மினி மார்க்கட்

336 - 338 காலி வீதி, கொழும்பு, போன்: 83328

யாழ்ப்பாணத்தில் D. விஜயகுமார் C/o மனேஜர், ராணி சினிமா யாழ்ப்பாணம். போன்: 584


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்
நிர்மலா

# அவள்

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி காலை 10-30, பி.ப. 2-30
6-15, இரவு 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த

# ராஜா

( புதிய கொப்பி - ஈஸ்ட்மென்கலர் )

றியோ (நகர மண்டபம் யாழ்ப்பாணம்)

Daily 9-45 p. m.
Gregory Peck in
STALKING MOON

கடைசி வாரம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
முத்துராமன் - நிர்மலா - ஜெய்சங்கர் - நாகேஷ்

# நீதி தேவன்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, 2-30, 6-30, 9-30
* தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
* தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டு இருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த




விடோ (யாழ்ப்பாணம்)
10-00, 2-00, 6-00, 9-30 மணிக்கு
ஆஷா பரேக்
ஹெலன்
நடித்த

# கரவன்


## மாதிரித் தோட்டம்

[வண்ணார்பண்ணை, புதன்]

ஊர்காவற்றுறைப் பகுதி விவசாயப் போதனாசிரியர் அலுவலகக் காணியில் இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி மாதிரித் தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தோட்டத்தில் சிறு தானியங்கள் உட்பட உபஉணவுப் பயிர்வகைகளும் செய்கை பண்ணப்பட்டுள்ளன. விவசாயிகள் இத்தோட்டத்தைப் பார்வையிட்டுப் பயிற்சி பெறுவதற்காக இத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. கே. இராமலிங்கம் தெரிவித்தார். (அ)

## இனிப்புக் களவாடினராம்

[ஆனைக்கோட்டை, புதன்]

தேநீர்க் கடையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு போத்தல்களுடன் சொக்லேட்டுகளைத் திருட முயன்ற வாலிபர் ஒருவர் தற்போது நல்லூர் பொலிசில் வைக்கப்பட்டுள்ளார்.

நல்லூர்ச் சந்தியில் உள்ள கடையொன்றில் இச்சம்பவம் நடந்தது. சந்தேக நபர் அராலியைச் சேர்ந்தவர் என்று விசாரணையில் தெரியவந்தது. [ச]


REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Michael Caine
in
GET CARTER
(color)

நாகம்மாள்
(சுன்னாகம்)
தினசரி 4-30, 7 & 9-45
BUCK AND THE PREACHER
[சிட்னி பொயிட்டர் நடித்த சண்டைப்படம்]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - ஜெயந்தி
புன்னகை

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
யார் நீ
வி.வெ.ச. 4-15 ஞா 10-30
THEY ONLY KILL THEIR MASTERS


# பிரிட்டனில் திடீர் பொதுத் தேர்தல்?

(லண்டன், பெப்.)

பிரிட்டனில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்று நடக்கலாம் என்று லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலக்கரிச்சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த "நெருக்கடி" ஏற்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குக் கடைசி நேரத்திலும் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததையடுத்தே பிரிட்டனில் திடீர் மாறுதல் உருப்பெற்றுள்ளது.

தொழிலாளர் யூனியன் தலைவர் நிலச்சுரங்கத் தொழிலாளர்களுக்கு நிதி உதவும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிக ஊதியம் கொடுபடாதற்கு ஒப்புக்கொண்டால் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவார்கள் என்று நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் எட்வர்ட் ஹீத் விரைவில் பொதுத் தேர்தல் பற்றி அறிவிப்பார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## பண்டா-செல்வா...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதிகள் இனிமேலும் நிகழ எந்த ஒரு தமிழ் சிங்களமக்கள் இடமளிக்க மாட்டார்கள்.

இந்திய பிரயாணத்தின் போது நாம் அறிந்த முக்கிய விடயம் தமிழரசாருக்கும் இந்திய திராவிடமுன்னேற்றக் கழகத்தாருக்கும் எந்தவித ஒற்றுமையும் இல்லை என்பது பற்றி இந்தியப்பிரதமர் எமக்கு அளித்த உறுதி மொழியாகும்.

### தமிழரசாருடன் பேச ஆயத்தம்

தமிழரசாருடன் பேச்சுவார்த்தை நாம் நடாத்த எண்ணியுள்ளோம். நாடு நலம் பெற தமிழ் சிங்கள நல்லுறவு வளர வேண்டும். விவசாயிகளின் பிரச்னைகள் முக்கியமாகத் தீர்க்கப்படல் அவசியம் இதனை மனதில் வைத்து இன்றைய இளைஞர் சமுதாயம் ஒன்றுபட்டு இயங்க முன்வர வேண்டும் என்றார்.

மல்லாகம் காரைநகர் சந்தியில் வைத்து அநுராதபுர நாயக்கர் ப தேச. கூ. சங்க இயக்குனரால் வரவேற்கப்பட்டு மலர்மாலை அணிவித்து அழைத்துச் செல்லப்பட்டார். மக்கள் வங்கி, வட்டுக்கோட்டைத் தொகுதி கள் உற்பத்தி சங்கம், பட்டினசபை ஆகியன வரவேற்பளித்தன.

பெலியத்தை எம். பி. திரு. மகிந்த ராஜபக்ச, வடடு எம். பி. திரு. ஆ. தியாகராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

## உண்ணா விரதமும் துக்கதினமும்

(யாழ்ப்பாணம், வியாழன்)

இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை தமிழினத்தின் துக்க தினமாக அனுஷ்டிப்பதென்றும் அன்று உண்ணாவிரதம் அனுஷ்டிப்பதென்றும் தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது.

கடந்தமாதம் 10ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதி நாள் பரிசளிப்பு வைபவத்தின் போது ஏற்பட்ட அசம்பாவிதத்தில் உயிர்துறந்த 9 பேருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக இந்நடவடிக்கையைத் தமிழர் கூட்டணிமேற்கொள்கிறது.

யாழ்ப்பாணம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 9 திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை உண்ணாவிரதம் நடைபெறும். உண்ணாவிரத முடிவில் தமிழ்த் தலைவர்கள் பலர் உரையாற்றுவார்கள். — [அ]

## லஞ்சம் வாங்கிய 12 பேர் பிடிபட்டனர்

கொழும்பு, புதன்

லஞ்சம் வாங்கியதாகக் கடந்த மாதத்தில் 12 அதிகாரிகள் பிடிபட்டிருக்கிறார்கள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், கல்லூரி அதிபர் ஒருவர், காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் ஆகியோரும் இதில் அடங்குவர். இவர்கள் அனைவரும் நீதிமன்றத்தின்முன் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

## 60 ஓவர் போட்டி

( 1ம்பக்கத் தொடர்ச்சி)

டங்களைப் பெற்றது. இந்தியக் கோஷ்டி 39.1 ஓவர்களில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 109 ஓட்டங்களைப் பெற்றது.


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன்
ஜெயலலிதா - மனோரமா
நடித்த

# எங்கள் தங்கம்

# இன்று மகத்தான ஆரம்பம்

# ஸ்ரீதர் சினிமா

ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இன்று 6-30-க் காட்சி அழைப்பினர்களுக்கு மட்டும்
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 10-00
★ சிவாஜி ★ ஜெமினி ★ சாவித்திரி ★ ஜெயலலிதா ★ சிவகுமார்
நடித்த

# ★ கந்தன் கருணை ★

(ஈஸ்ட்மென் கலர்)
டிக்காற் விபரம்: ஸ்கிறீன் ரேங்கு 1-00, முதல் ரேங்கு 1-75, O. D. C. 2-75, பல்கனி 3-00.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

வைத்தியனின் குறைத வியாதியால் சாவதில்லை. அளவுக்கதிகமான மருந்தால்தான் சாகும்.

—இந்திய மொழி


# ஈழநாடு

(7-2-74)


## வெற்றிபெற வாழ்த்துவோம்

இலங்கையின் முதலாவது எண்ணெய்க் கிணறு தோண்டும்வேலை இன்று காலை சபுவேலியில் மன்னுப் பேசாலைக்கு அண்மையிலுள்ள இடத்தில் சகலதைச் தலைவர்களின் ஆசியுடன் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஆரம்பித்துவைக்கவிருக்கிறார். எண்ணெய் ஆயுகம் உலகளவிலே ஒருவகைக்கலக்கில் சேர்ந்துக்கையில் என் கெல்லாம் எண்ணெய்ப்படி வங்களிருக்கின்றவோ அவற் றைக் கண்டுபிடித்து எண் ணெய் எடுக்கவேண்டியன. இமிக அவசியமும் ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

எண்ணெய் விற்பனை யும் விநியோகத்திலும் "ரு யோகம்" அனுபவிக்கின்ற வல்லவர்களே' இன்று எண் ணெய்க்காக ஆலாய்ப் பறக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

அரபுநாடுகளின் நியாயமான போராட்டத்துக்கு நமதுநாடு பூரண ஆதரவளித்தபோதும் எ போதிலும் ஏதவைவே விலைவாசி உயர்வினாலும் அத்தியாவசிய உணவுப்பொருள் தட்டுப்பாட்டினாலும் கஷ்டமும் [illegible] நமதுநாடு எண்ணெய்ப் பிரச்னையாலும் துன்பமும் தொல்லையும் அனுபவிக்க வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு அந்நாடுகளும் காரணமாக இருந்துள்ளன வே என்பது கவனிக்கவேண்டியது!

ஆனாலும் நாம் முன்னரும் இதே பத்தியில் குறிப்பிட்டபடி பலஎதிர்ப்புக்களையும் சமாளித்து இந்நாட்டில் எண்ணெய்ப் படிவங்களைக் கண்டுபிடித்து எண்ணெய் உற்பத்தி செய்யப் படுவதுபோல் நாமும் நாடு விடுதலைபெற்ற காலத்திலேயே இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தால் இன்று இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது.

காலம் கடந்தாயினும் எண்ணெய் படிவங்களைக் கண்டுபிடித்து எண்ணெய் பெற எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. இந்த முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று மக்களுடன் சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.

எண்ணெய்ப் படிவங்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதில் இதுவரை காலங்கடத்திவந்த போல் இந்தியாவின் சேது சமுத்திரத்திற் செய்பட விருக்கும் நிலைமை உணர்ந்து வடபகுதித்துறை முகங்களை வெளிநாட்டுவாவு தலின் வசதிகள் கொண்ட துறைமுகமாக அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தையும் உணர்ந்து காலந்தாழ்த்தாமல் கவனம் செலுத்தவேண்டியது அவசியமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

## துணி மோசடி

பங்கீட்டரிசிமுறையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்காக வழங்கப்பட்ட துணிகளில் கூட்டுறவுச்சங்கங்களில் பெரும் மோசடி நடைபெற்றுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒருகோடி அறுபதுலட்சம்ரூபாய் சம்பந்தமான இந்த மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எவ்விதயவும் காட்டப்படமாட்டாது என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்தின எச்சரித்திருக்கிறார்.

இது எச்சரிக்கையோடு மட்டும் நிற்கக்கூடிய விஷயமல்ல. மோசடி நடைபெற்றுள்ளதென்பது சந்தேகத்துக்கிடமின்றிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கத்தில் ஊழல் மோசடிகள் இருப்பதாக முன்னரே புகார்கள் வெளிவந்தன. இவற்றை ஒழித்துக்கட்டுவதற்காகவே கூட்டுறவு இயக்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஆனால் புனரமைப்புச் செய்தபின்னர்தான் கூட்டுறவு இயக்கத்தில் ஊழலும் மோசடியும் அதிகரித்துள்ளதென்ற குற்றச்சாட்டை இந்தத் துணிமோசடி உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கட்சி அரசியல் தலையீடுகள் கூட்டுறவு இயக்கத்தில் அதிகரித்ததே ஊழல்மோசடிகள் மலிந்துபோனதற்குக் காரணம் என்ற பொதுவான புகாரையும் இச்சம்பவம் உறுதிசெய்கிறதென்றே சொல்லவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்திலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுத் தாபனங்களிலும் ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி காண்பதற்கான முயற்சிகளை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ளாவிடில் கூட்டுறவு இயக்கத்திலும் கூட்டுத் தாபனங்கள் மற்றும் அரசாங்க இலாகாக்கள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல்போய் விடுமென்பதை மறந்துவிடக்கூடாது.




புகழ்

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்கவல்ல புகழைச் செய்தால் வானுலகம் அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமேயல்லாது தேவரைப் போற்றாது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 61-ம் இலக்கத்தில் [illegible] 1974-ம் ஆண்டு பெப்ரவரி 7-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanadu [illegible] P. O. Box. No. 49, Jaffna. Telegrams" [illegible] புதினப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது.

# நாளை நிகழும் குருமாற்றம்
# நாட்டுக்கு நன்மைதரும்
## விவசாயத்தில் அமோக வெற்றிகிட்டும்

—சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை —

இன்று வெள்ளிக்கிழமை முன்னிரவு 42நாழிகை 36விநாடியில் நடைபெறவிருக்கும் வியாழமாற்றம் பல விந்தைகள் நிறைந்ததாகும். இந்த வியாழமாற்றம் பொதுவாக ஆசிய மக்களுக்கு ஓரளவில் விமோசனம் அளிக்கும். இதுவரை உலகப்பெரியார்களின் வரிசையில் உயர்ந்துநின்றபல மனிதர்கள் மதிப்பிழந்து தாழ்வுநிலை எய்துவர். தொழிலாளர் மத்தியில் பதட்டநிலை காணப்படினும் முடிவுமகிழ்ச்சியாகவே இருக்கும். தொழில் வளம் பெருக இடமுண்டு. பல புதிய கைத்தொழில்கள் நமது நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும். விவசாயத்துறையில் நமதுநாடு எவரும் எதிர்பாராத முன்னேற்றம் காணும். விவசாயிகள் சற்றுநலிந்தாலும் இறுதியில் மகிழ்வுகிடைக்கும். அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதி, சூழ்ச்சி, புரட்சி போன்ற எந்த நடவடிக்கையும் வெற்றியளிக்காது. இன்று தூற்றுவோர் நாளை போற்றுவர். மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெருகி பல அரசியல் தலைவர்கள் புகழேணியில் ஏறுவர். தோட்டக்காரர்கள் உப உணவுப்பொருட்களை பருவமழையினால் பெருக்குவர். நாட்டில் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமான அளவு குறையும். மக்களின் அத்தியாவசிய தேவைப் பொருட்கள் அதிகவிலைக்குக் கிடைப்பினும் படிப்படியாக இறங்கி மக்களுக்கு இலகுவை உண்டாக்கும். சோளம், குரக்கன், இறுங்கு, வரகு, சாமை போன்ற பழம் பெருமை வாய்ந்த தானியங்கள்பல்கிப்பெருகி மக்கள் பசிப்பிணியிலிருந்து விலகிவாழ வழிகிடைக்கும். அரசாங்க அலுவல்களில் ஈடுபடுவோருக்கு ஏற்ற இறக்கம் சமமாகக் காணப்படும். வாகனச்சொந்தக்காரர்களுக்கு மந்த நிலை காணும். காதல் உலகைப் பொறுத்தவரை ஏமாற்றமும் இடர்ப்பாடுகளுமே காணப்படுகின்றன. குறிப்பாக பெண்கள் அவமதிக்கப்படுவர். சுகாதாரத்தைப் பொறுத்தவரை அரசு ஒரு சோதனைக்குள்ளாக நேரிடும். திடீரெனப் பரவும் தொற்று நோய்கள் அரசுக்கு தலையிடி கொடுப்பினும் அவ்வப்போது கட்டுப்படுத்தப்படும்; மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் மீண்டும் பதட்டநிலை தோன்ற இடமுண்டு. இந்த வியாழமாற்றத்தால் நாட்டுக்கு தீமையைவிட நன்மையே அதிகரிக்கும். நமது நாட்டின் கல்வி வளர்ச்சியில் ஏற்படும்மாற்றங்கள், உலகின் கவனத்தைக் கவரும். விளையாட்டுத்துறை பிரபலமடையும்.

இராசிவாரியானபலன் கீழே தரப்படுகின்றன.

மேஷம்:- சரீரசுகம், செய்காரியங்களில் வெற்றி, பிறர் பொருள் வரவு, பெரியோரிடம் மதிப்பு ஆகியவை உண்டு. இயந்திர இயக்குனர்களுக்கு சகசுகமும், அரசியல்வாதிகளுக்கு மதிப்புக் கிடைக்கும். காதலர் வாழ்வில் கனிவான நிகழ்ச்சியும், குடும்பஸ்தர்களுக்கு புத்திர சுகமும் உண்டு.

இடபம்:- வாகனச்சொந்தக்காரர்களுக்கு மந்த நிலையும், விவசாயிகளுக்கு வெற்றியும் கிட்டும். செலவு அதிகரிக்கும். அரசஊழியருக்கு இடமாற்றமுண்டு. வியாபாரிகளுக்குச் சம்மான வருமானம் கிடைக்கும். பிரயாணத்திற்கு இடமுண்டு.

மிதுனம்:- புண்ணிய ஷேத்ர [illegible]

நினைத்தவை நடப்பதுமுண்டு. விவசாயிகள் விமோசனமடைவர். அரசியல்வாதிகளுக்கு அவதானம் வேண்டும். ஆசிரியர்கள் அமைதிபெறுவர். வணிகர்களாயின் வருமானம் கிடைக்கும்.

கடகம்:- உறவினர் பகை, சொந்தத்தால் எதிர்பாராத துன்பம், விவசாயிகளுக்குவீண் செலவு. கடல்தொழில் புரிவோர்க்குக் கவலை. கண்ணியத்துடன் நடப்பின் கசப்பான சம்பவங்களைத் தடுக்கலாம்.

சிம்மம்:- தனித்தொழில்புரிவோர் தனவரவு காண்பர். விவசாயிகளுக்கு விருத்தியும், குடும்பத்தில் குதூகலமும் உண்டு. கலைஞர்கள் மதிப்படைவர். காதலர்கள் மனமொத்து குடும்பவாழ்வில் ஈடுபடுவர். நீண்டநாள் தடைப்பட்ட தொழில் கைவந்துசேரும்.

கன்னி:- சத்துருக்களால்சஞ்சலம், உடல்நலக்குறைவு, உறவினர் மத்தியில் பொறுமையுடன் நடப்பின் நலம். அரச ஊழியர்களாயின் இடமாற்றத்திற்கு இடமுண்டு. தொழிலாளர்கள் மத்தியில் பதட்டநிலை தோன்றும். குடும்பத்தில் பொறுமையும், கல்வியில் ஊக்கமும் வேண்டும்.

துலாம்:- விவசாயத்தில் வெற்றியும் விரும்பியபொருள் வருதலும், உத்தியோகஉயர்வுமுண்டு. மாணவர்கள் மத்தியில்கல்விக்கவலை நீங்கும், குடும்பத்தவர்களுக்கு புத்திரமகிழ்ச்சியும் பொன்பொருள் வரவும் உண்டாகும். காதலர் வாழ்வில் களிப்பும், கைத்தொழில் புரிவோருக்கு கணிசமான வரவும் உண்டு. நோய் பிணி தீரும்.

விருச்சிகம்:- வாகன சுகம், வரவு திருப்தி, எதிர்பாராத இடையூறுமுண்டு. கறுப்பு ஆள் வசம் கொடுக்கல் வாங்கல் தவிர்க்கவும். விவசாயிகளாயின் பிறர் நம்பிக்கைகூடாது. அரசு ஊழியர்களுக்கு உகந்த காலமாயினும் நிதான புத்தி வேண்டும். குடும்ப வாழ்வில் இனிமையும் இடையூறும்மாறி மாறித்தோன்றும்.

தனுசு:- குடும்ப வழிக் கவலை, பூமியின் நஷ்டம், விவசாயிகளுக்குலாபக்குறைவு. இல்லற வாழ்வில் எதிர்பாராத சோகம், காதலர் வாழ்வில் கலகம் ஏற்பட இடமுண்டு. வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். நீண்ட பிணி உள்ளோர்க்கு சோதனை காலம்.

மகரம்:- தொழில் நலம். தொல்லைகள் நிவிர்த்தி. குடும்ப சுகம், குறிக்கோள் வெற்றி, வீடு வாசல் சிறப்பு. நீண்டநாள் திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் உண்டு. பிரிந்த காதலர்கள் மீண்டும் ஒன்று சேர்வர். கலைஞர்களுக்கு மதிப்புண்டு. கைத்தொழில் கடற்றொழில் புரிவோர் கணிசமான வெற்றி அடைவர். கல்விக்கு சிறப்பான காலம்.

கும்பம்:- சாதாரண பலன். பொறுமை வேண்டும். நண்பர் மூலம் நம்பிக்கை மோசடி நேரும். விவசாயிகள் பருவ காலத்தை தவறவிடாது நிதான புத்தியுடன் தொழில் புரிந்தால் நலம் பெறுவர். பூமிப் பிணக்குகள் தூக்கலாம். உடல் நலம் பாதிக்கப்படும். சுகாதாரம் வேண்டும். கன்னிப்பெண்கள் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்

யாழ்ப்பாணத்தில் ஏறிக்கொண்டே போன அரிசியின் விலை இப்போது இறங்கிக்கொண்டே வருகிறது. இனி எப்போது ஏறத்தொடங்குமோ?

நான்கு சுண்டுநல்ல குத்தரிசி நான்கு ரூபாவிக்கே கிடைக்க முடிவது இன்றைய நிலையில் ஆச்சரியந்தான்!

இப்போதுள்ள நிலையில் உணவு தானியங்களும் காய்கறி கிழங்குவகைகளும் மலியலாம் என்றே தோன்றுகிறது.

தீமையிலும் நன்மை உன்டென்று சொல்வார்கள். உணவு நெருக்கடி ஏற்பட்டபோதுதான் ஓர் அங்குல நிலத்தையும் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணம் நாட்டு மக்களிடையே ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இந்த முயற்சி புதிதல்லவென்றாலும் 1958-ம் ஆண்டின் பின் இங்குவந்து 'குரோட்டன்' வளர்த்தவர்களும் கூட இன்று மரவள்ளித்தடி வைத்திருக்கிறார்களென்றால் அது பாராட்டுக்குரியது தானே!

0 0 0

இந்தியாவுக்குப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விஜயம்செய்தபோது யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுடனும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடனும் உலகப் பிரச்னைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார். என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. இதே சமயம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள பிரச்னைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளிலும் இலங்கைப் பிரதமருக்கே வெற்றி கிடைத்திருப்பதாக சில இந்தியப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வல்லவர் என்பது 1964-ம் ஆண்டில் ஏற்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திலிருந்தே தெளிவு!

ஆனால் உலகப் பிரச்னைக்கும் உள்நாட்டில் பல பிரச்னைகளுக்கும் விவேகமான தீர்வுகாணக்கூடிய பிரதமர் இதிமா தமிழர் பிரச்னையில் மட்டும் இன்னமும் தீர்வுகாணமுடியாமலிருப்பதற்கு என்ன காரணம்?

இதற்குப் பிரதமரைக் குறை சொல்லமுடியுமா?

தமிழ் மக்களின் பிரச்னைகளை நன்கு தெரியாதவர்கள் பலரும் பிரதமருக்கு ஆலோசனை சொல்லி அதன் மூலம் தமது சுயநோக்கத்தை அடையலாம் என்று நினைப்பதுவே இதற்குக்காரணம் என்று சிலர் கூறுகின்றனர்.

இதில் உண்மை இருக்கிறதா? ஆராயவேண்டிய விஷயம்.

நல்லெண்ணத் தூதுவர்களாகவும் உண்மை நிலையையும் தமிழரின் பிரச்னைகளையும் அறிந்து செல்வதற்காகவே இங்கு வருவதாகவும் கூறிக்கொண்டு வருபவர்கள் என்ன செய்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சிகளெல்லாம் எந்த அளவுக்குப்பயனளித்திருக்கிறது.

இவையும் ஆராயவேண்டிய விஷயங்களே!

ஊர்சுற்றி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org